| Roll No. | | | | | | | | | | | | Serial No. of Q. C. A. B. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 63 ]  [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 24

Total No. of Questions : 63 ]  [ Total No. of Printed Pages : 24

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T**  **ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು**

**Code No. : 10-T**  **Subject : First Language — TAMIL**

ದಿನಾಂಕ : 18. 06. 2013 ]  [ Date : 18. 06. 2013

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 12-45 ರವರೆಗೆ ]  [ Time : 9-30 A.M. to 12-45 P.M.

ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 125 ]  [ Max. Marks : 125

**FOR OFFICE USE ONLY**

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | 14. | | 27. | | 40. | | 53. | |
| 2. | | 15. | | 28. | | 41. | | 54. | |
| 3. | | 16. | | 29. | | 42. | | 55. | |
| 4. | | 17. | | 30. | | 43. | | 56. | |
| 5. | | 18. | | 31. | | 44. | | 57. | |
| 6. | | 19. | | 32. | | 45. | | 58. | |
| 7. | | 20. | | 33. | | 46. | | 59. | |
| 8. | | 21. | | 34. | | 47. | | 60. | |
| 9. | | 22. | | 35. | | 48. | | 61. | |
| 10. | | 23. | | 36. | | 49. | | 62. | |
| 11. | | 24. | | 37. | | 50. | | 63. | |
| 12. | | 25. | | 38. | | 51. | | × | |
| 13. | | 26. | | 39. | | 52. | | × | |
| | | | | | | | | **Total Marks** | |

| **Total Marks in words** | | | **Grand Total** | |
|---|---|---|---|---|
| 1. ✓ | | ✓ | ✓ | |
| 2. ✓ | | | | |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* | |

[ Turn over

*மாணவர் கவனத்திற்கு :*

i) இது வினாத்தாளுடன் கூடிய விடைத்தாள்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிக்கத் தேவையான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள அளவின்படியே விடைகளை எழுதவும்.

iii) இந்த வினாத்தாள் 'பொருத்துக' பிரிவையும் சேர்த்து மொத்தம் 63 வினாக்களைக் கொண்டுள்ளது.

iv) மாணாக்கர்கள் விடைகளை பென்சிலால் எழுதக்கூடாது. பென்சிலால் எழுதிய விடைகள் மதிப்பிடப்படமாட்டாது.

v) மாணாக்கர்களுக்கு வினாத்தாளைப் படிப்பதற்கென 15 நிமிடங்கள் கூடுதலாக தரப்பட்டுள்ளது.

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( **Incomplete statements** ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடை என்று நீங்கள் கருதுபவற்றை தேர்ந்தெடுத்து அதன் கீழ் உள்ள விடைப் பகுதியில் விடையை குறியீட்டுடன் முழுவதுமாக எழுதவும் : $15 \times 1 = 15$

1. கம்பராமாயணம் எத்தனை காண்டங்களை உடையது ?

(A) எட்டு

(B) பத்து

(C) ஆறு

(D) மூன்று.

*விடை :* ______________________

2. இயேசு காவியத்தை இயற்றியவர் யார் ?

(A) கண்ணதாசன்

(B) சிற்பி

(C) வாணிதாசன்

(D) பாரதிதாசன்

*விடை :* ______________________

3. தமிழரசி தன் முடியில் எதனைச் சூடியுள்ளாள் ?

(A) திருக்குறள்

(B) சிலப்பதிகாரம்

(C) சூளாமணி

(D) மணிமேகலை.

*விடை :* ______________________

4. ‘ஆனந்தரங்கப் புரவி’ என்பது

(A) குதிரை

(B) யானை

(C) கப்பல்

(D) தேர்.

*விடை :* ________________________

5. அடிப்படை இன்பத்தில் தலையாயது .................... இன்பம்.

(A) உளவியல்

(B) பொருள்

(C) வாழ்வியல்

(D) பேரின்பம்.

*விடை :* ________________________

6. ‘வாழ்க’ என்பதன் இலக்கணக் குறிப்பு

(A) வியங்கோள் வினைமுற்று

(B) ஏவல் வினைமுற்று

(C) உருபு மயக்கம்

(D) தொழிற்பெயர்.

*விடை :* ________________________

7. ‘வீசு தென்றல்’ என்பது

(A) பண்புத் தொகை

(B) உவமைத் தொகை

(C) உம்மைத் தொகை

(D) வினைத் தொகை.

*விடை :* ________________________

[ Turn over

8. இரட்டைச் சொல்லாக அமைந்து பிரித்தால் பொருள் தராதது

(A) அடுக்குத் தொடர்

(B) இரட்டைக் கிளவி

(C) விகாரம்

(D) உடம்படுமெய்.

*விடை :* ________________________

9. மணிமேகலையை இயற்றிய ஆசிரியர்

(A) திருத்தக்கத் தேவர்

(B) திருவள்ளுவர்

(C) இளங்கோவடிகள்

(D) சீத்தலைச் சாத்தனார்.

*விடை :* ________________________

10. தனிவாயிலைக் காவல் புரிந்தவன்

(A) மெய்ப்பொருள் நாயனார்

(B) முத்தநாதன்

(C) தத்தன்

(D) அரசியார்.

*விடை :* ________________________

11. 'காயக் கண்டது'

(A) சூரிய காந்தி

(B) வெண் தயிர்க்காண்டம்

(C) வான்சுழி வெள்ளம்

(D) காய்குலைச் செந்நெல்.

*விடை :* ________________________

12. முடுக்காய் நின்றவள்

(A) முத்தாள்

(B) மூத்தவள்

(C) சிந்தாதேவி

(D) முப்பெருந்தேவி.

*விடை :* ______________________

13. பொம்மலாட்டத்தில் பொம்மைகள் .................... தோலினால் செய்யப்படுகின்றன.

(A) பசு

(B) மான்

(C) எருமை

(D) காளை.

*விடை :* ______________________

14. கரிகாலன்

(A) ஊர்ப்பெரியவர்

(B) சோழ அரசன்

(C) நிலத்தை விற்றவர்

(D) நிலத்தை வாங்கியவர்

*விடை :* ______________________

15. சீவகனின் குலகுரு

(A) சுந்தரமுனிவர்

(B) குடிலன்

(C) புருடோத்தமன்

(D) நடராசன்.

*விடை :* ______________________

கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிறைவு செய்க : 5 × 1 = 5

16. திருக்குறளை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ................... .

17. அஞ்சுபாபி ஜார்ஜ் தாண்டிய நீளம் ................... மீட்டர்.

18. பெண்ணடிமை தீரும் வரை ................... தீராது.

19. சின்னப்பிள்ளை தொடங்கிய தொண்டு நிறுவனம் ................... .

20. குற்றெழுத்து நெட்டெழுத்தாய் மாற்றம் பெறுவது ................... விகாரம்.

21. பொருத்துக : 5 × 1 = 5

| | | | |
|---|---|---|---|
| (a) | பிடி | i) | சோபியா |
| (b) | அரசனாக வேண்டுமெனில் | ii) | ஹூஸ்டன் |
| (c) | நாசா | iii) | பெண்யானை |
| (d) | டால்ஸ்டாயின் மனைவி | iv) | கவிமணி தேசிய விநாயகம் |
| (e) | நாடகநூல் | v) | செர்டகாப் |
| | | vi) | மனோன்மணீயம். |

*விடைகள் :*

a) ____________________

b) ____________________

c) ____________________

d) ____________________

e) ____________________

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஒரு*** வாக்கியத்தில் விடை தருக : 10 × 1 = 10

22. பூதஞ்சேந்தனார் எத்தகைய ஊக்கம் இனிது என்கிறார் ?

23. மரங்கள் இறைவனை எவ்வாறு துதிக்கின்றன ?

24. இரட்டுற மொழிதல் என்றால் என்ன ?

25. கருநாடகத்தில் தோன்றிய சமயசீர்திருத்தவாதி யார் ?

26. மக்களுக்குப் பொதுவானவை எவை என்று பாவலரேறு பெருஞ்சித்திரனார் கூறுகிறார் ?

27. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது எது ?

28. உருபு மயக்கம் என்றால் என்ன ?

29. வெற்றி உனக்கு முன் கொடி எடுத்துப் போகிறது என்று இளைஞனை அழைத்தவர் யார் ?

30. ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பு எத்தனை தொகுதிகளாக வெளிவந்துள்ளது ?

31. 'என் கைவேலைத்திறன்' என்று டால்ஸ்டாய் எதனைக் குறிப்பிட்டார் ?

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***மூன்று*** வாக்கியங்களில் விடை தருக : $15 \times 2 = 30$

32. குணங்குடி மஸ்தான் இறைவனை நோக்கி இயம்புவது யாது ?

33. மழையின் சிறப்புகளாக வள்ளுவர் கூறும் இரண்டு கருத்துக்களை மட்டும் எழுதுக.

34. எது நாய் பெற்ற தெங்கம்பழம் போன்றது ?

35. சோழனின் போர் யானை நாணி புறங்கடை நிற்க காரணம் என்ன ?

36. ஔவையார் எதனை நல்ல நிலமெனக் குறிப்பிடுகிறார் ?

37. ஆனந்தரங்கம் பிள்ளையிடத்து லெனுவார் எவ்வாறு அன்பு காட்டினார் ?

38. அந்தணர் தம் மனைவியிடம் மகிழ்ந்து கூறியது யாது ?

39. தீயவழியில் பொருளீட்டியவர் எவ்வாறு துன்புறுகின்றனர் ?

40. லிண்டன் பி. ஜான்சன் ஸ்பேஸ் சென்டரைப் பற்றி எழுதுக.

41. சுந்தரம் பிள்ளையவர்களின் எல்லையற்ற தமிழ்ப்பற்றைப் புலப்படுத்துக.

42. அடுக்குத் தொடர் என்றால் என்ன ?

43. தொடை என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும் ?

44. வியங்கோள் வினைமுற்று என்றால் என்ன ? சான்று தருக.

45. பண்ணை ஆட்கள் செர்டகாபிடம் விடுத்த வேண்டுகோள் யாது ?

46. உலகம் எவற்றைக் காணப்போவதாக விசயன் கூறினான் ?

*குறிப்பு :* பின்வரும் வினாக்களுக்கு இடம் சுட்டிப்பொருள் விளக்குக : 5 × 3 = 15

47. ''உருவு கண்டு எள்ளாமை வேண்டும்''

48. ''என்னுயிர் ஓம்புதல் யானோ பொறேன்''

49. ''ஏழை மனிதனுக்கு ஒரே ஒரு பூமிதான்''

50. ''அரசே ! எதற்காக இந்த மாறுவேடம்''

51. ''நம் சுற்றுச் சூழலையே சொர்க்கம் ஆக்கும் சோலை''

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஐந்து*** அல்லது ***ஆறு*** வாக்கியங்களில் விடை தருக : 5 × 3 = 15

52. லாவணி பாடகர்கள் சமூக அக்கறை உள்ளவர்கள் என்பதை எவ்வாறு அறியலாம் ?

*அல்லது*

உடல்நலம் காத்தல் பற்றி வள்ளுவர் கூறுவது யாது ?

53. காந்தியடிகளின் பேத்தி சின்னப்பிள்ளையைக் குறித்து கூறியன யாவை ?

*அல்லது*

பெண்ணடிமையினால் வரும் கேடுகளைப் பாரதிதாசன் வழி விளக்குக.

54. செய்யுளில் அடி என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

*அல்லது*

வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

55. ஆகுபெயர் என்றால் என்ன ? அதன் வகைகளை எழுதுக.

*அல்லது*

வெண்பாவின் பொது இலக்கணம் வரைக.

56. கீழ்க்காணும் பழமொழிகளுள் ஒன்றை மட்டும் விளக்குக :

அ) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது

ஆ) மின்னுவதெல்லாம் பொன்னல்ல

இ) எறும்பு ஊர கல்லும் தேயும்.

அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4

57. ‘‘மலைகளிலே உயர் மலையை .......... நன்னாடே’’

*அல்லது*

‘‘பொல்லாத சொல்லி .......... கெடும்’’

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***எட்டு*** வாக்கியங்களில் விடை தருக : 3 × 4 = 12

58. சுத்தானந்த பாரதியார் தமிழன்னையை எவ்வாறு வாழ்த்தியுள்ளார் ?

*அல்லது*

ஆபுத்திரன் பாத்திரம் பெற்ற நிகழ்ச்சியையும், அப்பாத்திரத்தின் சிறப்பையும் வரைக.

59. லாவணி பாடகர்கள் பற்றி அறிந்தவற்றை எழுதுக.

*அல்லது*

திம்மக்காவின் தொண்டினை விளக்குக.

60. முதியவராக வந்து தீர்ப்பு வழங்கியவர் யார் ? அவர் வழங்கிய தீர்ப்பு யாது ?

*அல்லது*

அமெரிக்கர் காலத்தைப் பொன் போல் போற்றும் இயல்பினர் என்பதற்கு எடுத்துக்காட்டு தருக.

61. பின்வரும் பகுதியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக : $4 \times 1 = 4$

நீதிநெறி வழுவாமல் நிற்க வேண்டும்
நெஞ்சார உண்மைதனைப் பேச வேண்டும்
ஓதிமறை உயர்ந்தவரை மதிக்க வேண்டும்
ஒப்பற்ற ஆசான்சொல் கேட்க வேண்டும்
ஆதியிலே வாழ்ந்த முறை நினைக்க வேண்டும்
ஆபத்திலே உற்றவர்க்கு உதவ வேண்டும்
சோதிவடி வானவனைச் சொல்ல வேண்டும்
சுகம்பெறவே வாயார வாழ்த்த வேண்டும்

*வினாக்கள் :*

1. எப்படி நிற்க வேண்டும் ?
2. எவ்வாறு உண்மை பேச வேண்டும் ?
3. யாருடைய சொல்லைக் கேட்க வேண்டும் ?
4. யாரை மதிக்க வேண்டும் ?

*விடைகள் :*

1.

2.

3.

4.

62. விடுதியில் தங்கியுள்ள நீ, சுற்றுலா செல்ல அனுமதியும், பணமும் கேட்டு பெற்றோருக்கு ஒரு கடிதம் வரைக.

*அல்லது*

நீ வாழும் பகுதியில் ஒரு நூலகம் அமைத்துத் தர வேண்டி நகரசபை ஆணையருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக. $1 \times 5 = 5$

63. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்துக் கட்டுரை வரைக : $1 \times 5 = 5$

i) கணினியின் பயன்பாடு

ii) காடுகளைக் காப்போம்

iii) நாட்டு நலப்பணியில் மாணவர் பங்கு.